www.padippakam.com







தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (TELO) உத்தியோகபூர்வமான ஏடு.

# எழுச்சி




முப்படைகளின் முற்றுகைகள்....

தொடரும் இனப்படுகொலைகள்....

...பக்கம் - 10

செப்டம்பர் - 1986





டெலோவின் பா[illegible] மக்கள் எழுச்சிக் குரல்

படிப்பகம்

www.padippakam.com

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# விடுதலைக் குரல்

## அடுத்தது என்ன?

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் இரண்டு வார காலமாக நிகழ்ந்த இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை முடிந்து, கூட்டணித் தலைவர்கள் சென்னை திரும்பியுள்ளனர்.

தொடரப் போகும் பேச்சு வார்த்தையில், தமிழர் தரப்பில், விடுதலை அமைப்புக்களும் இடம் பெற வேண்டும் என்ற கருத்தினை கூட்டணி முன் வைத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கே தான் 'விஷயம்' ஆரம்பிக்கின்றது!

விடுதலை அமைப்புக்கள் கலந்து கொள்ளாத எந்தப் பேச்சு வார்த்தையும் அர்த்தமற்றது என்பது உலகறிந்த உண்மை!

டென்மார்க் இளவரசன் இடம் பெறாத 'ஹாம்லெத்' நாடகம் போன்றதே அது!

சமீபத்தில் இரண்டு தடவைகள் டெல்கிக்கு அழைக்கப்பட்ட விடுதலை அமைப்புக்களின் தலைவர்களிடம், ஈழத்தமிழர் பிரச்சினைக்கான எந்தவொரு அரசியல் தீர்வும் விடுதலை அமைப்புக்களின் பங்களிப்பு இல்லாமல் உருவாக முடியாது என்பதை இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கடேஸ்வரன் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து, தமிழக முதலமைச்சர் முன்னிலையில் நிகழ்ந்த சந்திப்பிலும், இந்திய வெளி விவகார அமைச்சர் சிவசங்கர் இக் கருத்தினை மீண்டும் வலியுறுத்தினார்.

இக்கருத்துக்கு செயல் வடிவம் கொடுக்க கூட்டணி குரல் கொடுத்திருப்பது ஒன்றும் அதிசயமானதல்ல!

"ஈழத்தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் நாங்களே'! எனக் கூட்டணி கொக்கரித்த காலம் ஒன்றிருந்தது. அது பழைய கதை!

இன்று அதே கூட்டணியே 'நிலைமை'யைப் புரிந்து கொண்டு, விடுதலை அமைப்புக்கள் கலந்து கொள்ளாத பேச்சுவார்த்தையில் அர்த்தமில்லை என்பதை நாசூக்காகத் தெரிவித்திருக்கிறது.

கொழும்புப் பேச்சுவார்த்தையின் அடிப்படையாக அமைந்த ஜெயவர்த்தனா அரசின் பிரேரணைகள், விடுதலை அமைப்புக்களால் ஒட்டு மொத்தமாக - திட்டவட்டமாக தூக்கியெறிப்பட்டவை!

இருந்தும், கூட்டணி ஜெயவர்த்தனா அரசுடன் பேசியது — விடுதலை அமைப்புக்களின் எதிர்ப்புக்கு மத்தியில்!

கடந்த ஆண்டு 'திம்பு'வில் நிலவிய கருத்தொற்றுமை இப்போது தமிழர் "தலைமை" யிடம் இல்லை!

'தலைமை' என்று கூறும்போது, கூட்டணியையும் சேர்த்தே குறிப்பிடுகின்றோம், அதன் பங்கும் பரிமாணமும், அதில் எவ்வளவு தூரம் குறுகியதாக இருந்தாலும் கூட!

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்படுபவர்களல்ல, நாம்.

தமிழர் தலைமையின் 'ஒரு பகுதி' கொழும்பில் பேசிவிட்டுத் திரும்பியுள்ள வேளையில், மிகப் பெரும்பான்மையான 'மிகுதி'யின் நிலைமை என்ன?

இந்திய அரசின் இடைவிடாத முயற்சியினால் நிகழ்ந்து கொண்டிருக்கும், அரசியற் தீர்வு காணும் நடவடிக்கைகளின் அடுத்த கட்டம் எது?

இக்கேள்விகள், இன்றைய அரசியற் சூழ்நிலையில் அதி முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஏகாதிபத்தியவாதிகளிடம், ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்னால், போர்முனையில் இழந்த தமிழ் ஈழத்தின் இறைமையையும், சுதந்திரத்தையும் மீட்டெடுப்பதை இலட்சியமாக கொண்ட விடுதலை அமைப்புக்கள் மிக விழிப்போடும் பொறுப்போடும் இன்றைய சூழ்நிலையில் செயற்பட வேண்டும்.

தமிழர் பிரச்சினையில் உருவாகக்கூடிய எந்தவொரு அரசியல் தீர்வும் 'ஐக்கிய இலங்கை' என்ற அரசியல் அமைப்புக்குள்ளேயே அமைய முடியும் என்றே இந்திய அரசு தொடர்ந்து கூறி வருகின்றது.

அகில அரசியற் கண்ணோட்டத்தில், இந்து மாகடற் பிராந்தியத்தின் இன்றைய புவியியல் அரசியல் பின்னணியில் இந்திய அரசின் நிலைப்பாடு நிச்சயமாகப் புரிந்து கொள்ளப்படக் கூடியதே!

ஈழத் தமிழர்களின் நம்பிக்கைக்கும் நட்புக்கும் உரிய ஒரே நாடு இன்று இந்தியா மட்டுமே!

இந்த நிதர்சன உண்மையை விடுதலை அமைப்புக்கள் மறந்து விட முடியாது.

சர்வதேச மட்டத்திலும் - சர்வதேசச் சட்டத்திலும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை 'எடை' போட்டுப் பார்த்தால், எமது எதிர்கால வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவு எவ்வளவு தூரம் இன்றியமையாதது என்பது இலகுவில் தெரிய வரும்.

எவ்வளவு தான் தத்துவார்த்த அரசியல் பேசினாலும், உலகுக்கு உபதேசம் கூறினாலும், ஒவ்வொரு நாட்டினதும் வெளி விவகாரக் கொள்கை அதன் சொந்த நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது.

நிலைமைகளின் நிர்ப்பந்தத்தால், இந்தியாவின் நிலைப்பாடு எமது விஷயத்தில் இன்று 'எப்படியும்' இருக்கலாம். ஆனால் எப்போதும் 'அப்படித்தான்' இருக்கும் என நாம் முடிவு செய்து விடக்கூடாது.

தமிழ் ஈழப் போராட்டம் வெறும் துப்பாக்கிச் சமர் அல்ல! அரசியற் போர்!

அரசியல் முனையில் — ராஜதந்திர முனையில், எமது எதிரியான ஸ்ரீலங்கா அரசினை நாம் சந்தித்தே ஆக வேண்டும்.

பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டத்தை இந்தக் கண்ணோட்டத்துடனேயே விடுதலை அமைப்புக்கள் அணுக வேண்டும் - கருத்தொற்றுமையுடன் அணுக வேண்டும்.

'கருத்தொற்றுமை' என்பது எதிர்நோக்கும் இக்கட்டான கட்டத்தை தாண்டுவதற்கான ஓர் தந்திரோபாயம் அல்ல!

இலட்சியத்தை இறுகப் பற்றி நின்று, விடுதலைப் பாதையில் விரைந்து சென்றிடத் தேவையானதோர் வழிமுறை - விதிமுறை!

அசையும் உதடுகளிலிருந்து அல்ல இணையும் இதயங்களிலிருந்தே 'கருத்தொற்றுமை' பிறக்க முடியும்.

இதை சகல தமிழீழ விடுதலை அமைப்புக்களும் தயவு செய்து சிந்திக்க வேண்டும்.

# சூரியனை ஏதும் செய்து விட முடியாது



பிஞ்சுக் கனவுகளை
அரங்கேற்றம் செய்த
பாடசாலையையும்

இளமையின் சுவடுகளைப்
பதித்த
எமது வயல் நிலங்களையும்
விட்டு

நாம்
வெளியேற்றப்பட்டோம்.

மேற்கு வாசலில்
சூரியன் விழுந்த
அந்த நேரங்களிலெல்லாம்
காற்று
நீர்
மரங்கள்
பூக்கள்
இவற்றின் ரம்மியமும்

அமைதியும்
எமது எதிரிகளால்
குலைக்கப்பட்டன.

வாலிபப் பருவத்தின்
இயல்பான சுகங்கள் கூட
எங்களுக்கு
இல்லாமற் போனது.

நிராதரவாய்
உத்தரவாதமின்றி
விட்டெறிந்த பழைய பொருளாய்

ஆவதிங்கு இயல்புகளாயிற்று.
வசந்தமாயிருந்த எங்களின்
அந்த நாட்கள்
மரித்ததில் நியாயங்கள்
எங்கே?

எமது காதலி
அம்மா அப்பா
தங்கை தம்பி
- தமிழ் பேசுதல் தவிர
வேறென்ன
குற்றஞ் செய்தோம்

எமது காணியும்
காற்றும் புழுதியும்
எமக்கானவை.

O

ஈரங்காயா
கால் தடங்களின் மேல்
சகாக்கள் மீண்டும்
சுவடுகள் பதிப்பர்.
மீட்சிக்கப்புறம்
வீடு திரும்புகையில்
நாங்கள் வசந்தம் பெறுவோம்.

O

அன்றைக்குப் போல்
வானின் நட்சத்திரங்கள்
மீண்டும்
எமக்காய்
எமக்காய்
உதித்து ஒளிரும்.

— அபிநயா.

படிப்பகம்

www.padippakam.com

# தலைவர் சிறீ சபாரத்தினம் படத்திறப்பு விழாக்கள்....

தலைவா சிறீ சபாரத்தினம் படத்திறப்பு விழா மற்றும்-இரங்கல் கூட்டங்கள் தமிழ் நாடெங்கும் நடைபெற்று வருகின்றன.


பெங்களூரில் 11-05-1986ல் இரங்கல் கூட்டம் நடைபெறறது. படத்திறப்புவிழா மற்றும் பொதுக் கூட்டங்கள் சென்னை பெரியார் திடலில் 18-05-1986 இலும், மயிலாடுதுறையில்-16-06-1986 இலும் நடைபெற்றது.

பெங்களூரில் தமிழ்ஈழ விடுதலை ஆதரவாளர்கள் சார்பில் நடைபெற்ற கூட்டத்திற்கு தினச் சுடர் ஆசிரியர் திரு சு. மணி தலைமை தாங்கினர்.

திரு பக்தவச்சலம்-சாந்திநகர் தொகுதி எம் எல். ஏ. கண்ணன்-அ தி மு க நகர மன்ற உறுப்பினர் பலராமன்-தி.மு.க செயலாளர் சோழன் -வழக்கறிஞர் மிஸ்ரா - பேராசிரியர் பூங்காவனம் - பெங்களூர் நகர இ. காங்கிரஸ் செயலாளர் முனுசாமி பெங்களூர் தமிழ் மன்ற செயலாளர் மகாலிங்கம்-கர்நாடக மேலவை கொறடா எம்.சி பெருமாள் மற்றும் தளபதி குட்டிமணியின் தம்பி குலம்-சிகாமணி ஆகியோர் உரையாற்றினர். கூட்டத்தின். துவக்கத்தில் இரங்கல் பாடலை ஒளிமலரவன் குழுவினர் பாடினர்.

சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைவர் சிறீ சபாரத்தினம் படத்தை தி.மு.க. தலைவர் கருணாநிதி திறந்து வைத்தார். தி.க. தலைவர் வீரமணி-த.வி.கூ. செயலாளர் அமிர்தலிங்கம்-திரை நீதி செல்வம் -ஆவடி மனோகரன்-ஈ.பி.ஆர்.எல் எப்-ஈரோஸ்-பிளாட் ஆகிய அமைப்புக்களின் போராளிகள்-தமிழ் ஈழ ஆதரவாளர்கள் உரையாற்றினார்கள்.

மயிலாடுதுறையில் நடைபெற்ற நிகழ்ச்சியை தன்மானத் தமிழர் பேரவை ஒழுங்கு செய்தது. நா.கு. கிருட்டிணமூர்த்தி தலைமை வகித்தார். குடந்தை ஸ்டாலின் அவர்கள் தலைவர் சிறீ சபாரத்தினம் படத்தை திறந்து வைத்தார். முடிவில் வழக்காடு மன்றம் நடைபெற்றது




















## சிறிலங்கா நவ சமசமாஜக் கட்சி, 15 தொழிற் சங்கங்களின் அறிக்கை

01. வடக்கிலும், கிழக்கிலும் இருந்து சிங்கள இராணுவம் பூரணமாக வாபஸ் பெற வேண்டும்.

02. அவசரகாலச் சட்டம் மற்றும் இராணுவச் சட்டத்தையும் வடக்குக் கிழக்கில் இருந்து நீக்க வேண்டும்.

03 இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், கொல்லப்பட்ட குடும்பங்களுக்கும், சேதமாக்கப்பட்ட சொத்துக்களுக்கும் உரிய நஷ்ட ஈடு உடனடியாக வழங்கப்படவேண்டும்

04. பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் அதே போன்று அமைப்புள்ள பல சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு இப்பொழுது இராணுவக் காவலிலும், சிறைக்கூடங்களிலும் இருக்கும் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

05. தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு அரசியல் தீர்வைக் கொடுப்பதோடு, அவர்களது சுயநிர்ணய உரிமையையும், சுய ஆட்சியையும் வழங்கவேண்டும்.






படிப்பகம்

www.padippakam.com

# தென்னாபிரிக்க நிறவெறி கதிர்வீச்சுகள் கருப்பின பனிப்புயல் முற்றுகை!.

மனித குலத்தின், - மனிதநேயம், மனிதாபிமானம் இவைகள் உணரப்படாத மானுட அத்தியாயங்கள். அதனால்த்தான் தென்னாபிரிக்க நிறவெறி சப்தங்களின் கதிர்வீச்சுக்கள் இன்னும் ஓயவில்லை.

ஒருபுறம் ஏகாதிபத்திய சுரண்டல், மறுபுறம் நிறவெறி பாசிச அரசின் ஒடுக்கல்.

சொந்த மண்ணின் சுகங்களை அனுபவிக்க முடியாத கருப்பின மக்களின் சோகங்கள்.

மனிதகுல மேம்பாடு-மனித நலன், உயர்வான இலட்சியம் இவற்றின் இயல்புக் குணங்கள்—

மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும், அமெரிக்க மேலாதிக்கத்தினதும் பொருளாதார லாபத்திற்காக சிறைப் படுத்தப் படுகின்றன — சிதைக்கப்படுகின்றன.

ஒடுக்கு முறையின் உச்சநிலை' அளவுக்கதிகமான சுரண்டல் — இவற்றின அச்சுறுத்தல்களின் உணர்வுகள் தென்னாபிரிக்க மக்களின் எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் — மன எழுச்சிகளில் விடுதலை வேட்கைகளாய் முளைத்துக்கொண்டன

புரட்சிச் சக்திகளின் முன்னேற்பாடும், நிறைவேற்றுப்பணிகளும் தென்னாபிரிக்க கலியுகத்தை — மாற்றியமைக்கும், புதுப்பிக்கும் தயாரிப்புக்களோடு உச்சம் பெறுகிறது.

ஏகாதிபத்திய, காலனியவாதிகளின் ஆதிக்க நலன்களுக்கு இசைவான போக்கை நெறிப் படுத்தும் தென்னாபிரிக்க நிறவெறி பாசிஸ அரசுக்கெதிரான — போராட்டத்தில் கருப்பின மக்களின் — தியாகங்கள் - தொடரும் பங்களிப்புகள் வெற்றியின் ஜனனங்களை அதற்கான அறிகுறிகளை மெய்ப்பிக்கின்றன.



கருப்பின மக்களின் குடியுரிமை, ஜனநாயக உரிமைகளைப் பறித்து அந்நியராக்கி அவர்களின் சுதந்திர தாயகத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்ட நிறவெறி போத்தா அரசின் பின்னணியில் — தென்னாபிரிக்க கருப்பின மக்களின் சுபீட்சத்திற்கான மூலவளங்களை கருப்பின மக்களே அடிமைகூலிகளாக்கப்பட்டு அவர்களின் உயிர்கள் பணயமாக்கப்பட்டு ஏகாதிபத்தியங்கள் கொழுத்து வரும் பொருளாதார இலாபங்கள தடுத்து நிறுத்தப்படவேண்டியது- தென்னாபிரிக்க கருப்பின மக்களின் போர்க்குணம்ச நியதி.

ஒடுக்கு சக்திகளின் - ஆதிக்க முதல்கள், சுரண்டும் தன்மைகள் சடத்துவமாவதும் உறுதி.

தென்னாபிரிக்காவில நிறவெறிக் கொள்கையை பிடிவாதமாக கடைபிடித்து வரும் தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சிக்கெதிராக சர்வதேச அளவில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக தென்னாபிரிக்காவிற்கெதிராக பொருளாதார தடைகளை விதிக்க காமன்வெல்த் அமைப்பைச் சேர்ந்த சில நாடுகள் முனனிற்கின்றன.

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் பஹாமாஸ் நாட்டின் தலைநகரான நாஸாவில் காமன் வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடைகளோடு புதிய பொருளாதாரத் தடைகளையும் தென்னாபிரிக்கா மீது நிர்ப்பந்திக்க முடிவு செய்துள்ளன.

பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உலகம் முழுவதிலும் அதிகரித்து வருவதோடு - தென்னாபிரிக்க நிறவெறி அரசு பிடிவாதம் தளராத நிலையில் மேற்கொண்டு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பல நாடுகள் கருதுகின்றன.

இத்தகைய நெருக்கடிகள் தென்னாபிரிக்க நிறவெறி அரசை அவதிக்குள்ளாக்கும் ஒரு முதற் கட்ட நடவடிக்கையாக செயற்பட்டால்- தென்னாபிரிக்க கருப்பின மக்களின் போராட்ட யுக்திகள் — பலமான சக்தியாக தென்னாபிரிக்க நிறவெறி அரசிற்கு பெரும் தாக்கத்தை உண்டு பண்ணலாம்.

ஆனால், இதே சமயம் நிறவெறி போத்தா அரசு ''பொருளாதாரத் தடைகளை பிறநாடுகள் விதித்துக் கொள்ளட்டும் ஆனால், கறுப்பர்களுக்கு அரசியல் உரிமை வழங்கும் எதையும் செய்து எங்களின் கொள்கையிலிருந்து பின்வாங்கமாட்டோம்'' என்று கொக்கரித்துள்ளது.

எனவேதான், 'காமன்வெல்த்' உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்- தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சியாளரிடம் எத்தகைய மாறுதல்களை - திருப்பங்களை உண்டு பண்ணும் என்பது கால ஓட்டத்தில் தெளிவாகப் போவதுண்டு

## பேச்சுவார்த்தைக்கெதிராக மக்கள் போர்க்கொடி

கொழும்பில் நடைபெறும் சிறீலங்கா அரசிற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமான பேச்சுவார்த்தைக்கெதிராகவும் - ஜெயவர்த்தனாவின் இராணுவக் காட்டாச்சிக்கு எதிராகவும் தமிழ் ஈழ மக்கள் நாளாந்தம் ஆர்ப்பாட்டங்களையும் ஹர்த்தால்களையும், பொதுக் கூட்டங்களையும் நடாத்தி வருகிறார்கள்.

காலாகாலமாக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் யாவும் காலப்போக்கில் கசக்கியெறியப்பட்டதாலேயே தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் பரிமாணம் பெற்றதென்பது தமிழ் ஈழ மக்கள் அனுபவ ரீதியாக கண்ட உண்மையாகும்.

இதனாலேயே, இத்தகைய வாய்ப் பேச்சுகளில் நம்பிக்கையில்லாது, போராட்ட அமைப்புகளுக்கு தங்களது பங்களிப்புகளை வழங்குகிறார்கள் தற்போதைய பேச்சுவார்த்தையும் எமது விடுதலையை பின்தள்ளும் என்பதால் அதற்கெதிராக போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 48 பாடசாலை மாணவர்களை காலியிலுள்ள பூசா இராணுவ முகாமிற்கு கொன்று சென்றதை ஆட்சேபித்து திருமலை பகுதி முழுவதும் 02. 07. 1986ல் பூரண ஹர்த்தால் நடைபெற்றது. பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டதோடு, கடைகளும் அடைக்கப்பட்டு வாகனப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. பொது மக்கள். ஒழுங்கு செய்த உண்ணாவிரதங்களும் நடைபெற்றன.

மாணவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுவதை ஆட்சேபித்து 02-07-1986ல் யாழ். இந்து மகளிர் பாடசாலை உட்பட யாழ்நகர அனைத்து பாடசாலை மாணவ, மாணவிகள் சேர்ந்து ஊர்வலம் நடாத்தினர் ஊர்வல முடிவில் யாழ், கல்வித் திணைக்களத்திற்கு சென்று யாழ். கல்வி அதிகாரியிடம் மனு ஒன்றை கையளித்தனர்.

'8- 07. 1986ல் இராணுவத்தினரால் கைதாகி ஆனையிறவு முகாமில் வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக் கழக 2ம் வருட மாணவன் எ. மன்சூர் என்பவரை விடுதலை செய்யக்கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 09- 07- 1986ல் பகிஸ்கரிப்பு நடாத்தினர்.

ஜெயவர்த்தனாவின் புதிய பிரேரணைகளையும், பேச்சுவார்த்தைகளையும கண்டித்து 13- 07- 1986ல் யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெற்றது பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்ட இவ் ஊர்வலம் மருதனாமடம் சந்தியில் ஆரம்பமாகி காங்கேசன் துறை வீதி வழியாக யாழ். நாச்சிமார் கோவிலடியை வந்தடைந்தது. பின்னர் யாழ். பல்கலைக்கழக வழக மைதானத்தில் கண்டனக் கூட்டம் நடாத்தபட்டது. ஊர்வலத்தின் இறுதியல் கொடும்பாவி ஒன்றும் எரிக்கப்பட்டது.

மாகாண சபைத் திட்டத்தை எதிர்த்தும், அரசியல் கட்சிகளின் மாநாட்டை கண்டிக்தும் 14- 07- 1986ல் ஊர்காவற்துறையில் ஊர்வலம் நடாத்தப்பட்டது

மாகாணசபைத் திட்டத்தை எதிர்த்து 12- 07- 1986ல் காரை நகரில் ஊர்வலம் நடாத்தப்பட்டது

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் வாகனங்கள் முகாமில தடுக்கப்படுவதை கண்டித்து 16- 07- 1986ல் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் ஹர்த்தாலும் நடைபெற்றது.

1980 ஜூலையில் 300 சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தம் செய்த அரச ஊழியர்களின் ஞாபக தினத்தையொட்டி தொழிற்சங்க கூட்டுக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட, 500க்கு மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்ட மறியல் போராட்டம் யாழ். செயலக முன்பாக 17- 07- 1986 பகல 12. 00 — 1. 00 மணிவரை நடைபெற்றது.

மூதூர் - நெடுங்கேணி - அடம்பன் - திருமலை பகுதிகளில் பொதுமக்களை இராணுவமும், ஊர்க்காவல் படையும் படுகொலை செய்வதை ஆட்சேபித்தும், மாகாணசபைத் திட்டத்தை எதிர்த்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 18- 07- 1986ல் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர்.

நெடுங்கேணியில் 10 பஸ் பயணிகள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து வடபிராந்திய பஸ் ஊழியர்கள் அனைவரும் 19- 07- 1936 காலை 10. 00 மணி தொடக்கம் 20. 07. 1986 காலை வரை வேலை நிறுத்தம் செய்தனர்.

17- 07- 1986ல் யாழ். தொலைபேசி திணைக்களத்தின் மீது கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொலைபேசித் திணைக்கழக ஊழியர்கள் 19- 07- 1986 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் யாழ் மாவட்ட உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி தொடர்புகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது.

24. 06. 1986ல் யாழ். முஸ்லிம் பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ விமானங்களின் குண்டுவீச்சை கண்டித்து யாழ் இஸ்லாமிய தமிழர் உட்பட அனைத்து தமிழ் பேசும் மக்களும் - கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் 22- 07- 1986ல் நடைபெற்றது. இதே தினம் யாழ் நகரில் பூரண ஹர்த்தாலும் அனுஷடிக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்கள் சிறீலங்கா ஆயுதப் படையினரால் படுகொலை செய்யபபடுவதை கண்டித்தும், மாகாண சபைத்திட்டத்தை எதிர்த்தும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் 25- 07- 1986ல் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர். இதற்கு ஆதரவு தெரிவித்து கிராமப் பகுதிகளின் சிறிய கடைகள் கூட பூட்டப்பட்டிருந்தன.

மட்டுநகர் மாவட்ட ஏறாவூர் - கரடியானாறு முகாம் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களை ஆட்சேபித்து இளவக்கலவாய்- இளவக் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வாழும் சுமார் 250 அன்னையர்கள் 28- 07- 1886ல் ஊர்வலவாக சென்று மட்டுநகர் அரசாங்க அதிபர் அந்தோணிமுத்துவிடம் தங்களுக்கு பாதுகாப்பு வழங்கும்படி மனுக்கொடுத்தனர்.

சிறீலங்கா அரசின் மாகாண சபைத் திட்டத்தை எதிர்த்து 18- 08- 1986ல் வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. இவ் ஊர்வலத்தில் சுமார் 5,000 பேர் கலந்து கொண்டனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் மன்னார் பேசாலை, அடம்பன் பகுதிகளில் பொதுமக்கள் இராணுவத்தினரால் - படுகொலை செய்யப்பட்டதற்கு ஆட்சேபம், தெரிவித்து 21. 07 1986ல் மன்னாரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# ஜீவனுள்ள வரலாற்று விதைகள்



போராட்டம்-இது ஒரு மகத்தான சக்திமையம்.

இதன் வல்லமை-போராளிகளின் புனிதமான இலட்சியப்பற்று!

இவர்கள் - திரட்சியுற்று மாபெரும் திறன் உள்ளவர்களாக உருக் கொண்டு உலகத்தை மாற்றியமைக்கும் முன்னணி சக்திகள்.

புதிய உலகை - புதிய சமுதாயத்தை படைக்கும் வரலாற்று விதைகள.

ஒடுக்கு முறை அரசு இயந்திரத்தை உடைத்தெறிய தெளிவான சிந்தனை உணர்வுடன் ஆயுதத்தைக் கருவியாக்கிக் கொண்ட புரட்சீத் துடிப்புள்ள வீர இளைஞர்கள். மனித சமூகத்திலிருக்கும் அனைத்து பந்தங்களிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு புதுரக மனிதனுகி புரட்சிப்பணிகளின் நிர்மாண கர்த்தாக்களாக நின்று

மரணத்தையும் பெருமதியாக்கிக் கொள்பவர்கள்-ஆனுலும் போராளிகளின்-பயணமார்க்கம் மகிழ்ச்சியான சம்பவங்களல்ல.

பாலைவன வெளிகளில் தோன்றும் கானல் நீர் விம்பங்கள்.

சோர்வடைந்து போகாத விடாமுயற்சியில் நம்பிக்கையும், அவர்களுக்கிருக்கும் மிகச்சிறந்த ஆற்றலும்-நெஞ்சுரமும் இறுதிவரை அவர்களை புரட்சியிலிருந்து துண்டித்துக் கொள்ளாது பாதுகாக்கும ஊக்கிகள். போராட்ட பயணத்தில் பெறும் அனுபவ கிரகிப்பு-முதிர்ச்சி இவைகள் அரசியல் ஞானத்தை ஊட்டுகின்றன.

உன்னதமான போர்க்குணம்சத்தைக் கொண்டுள்ள போராளிகள் - அவர்களிடமுள்ள பிரத்தியேகமான அம்சங்கள்-சிறந்த பண்புகள் - நடைமுறை வெளிப்பாடுகள்-

போன்றவற்றிலிருந்து - அவதானிக்கப்பட்டு - அவர்களது இலட்சியவேட்கைகள் கணிக்கப்படுகின்றன.

எனவே,

போராளிகளின் புனிதத்தன்மையின் கட்டுமானங்களை-அவர்களின் உள்ளாந்த கட்டுப்பாடுகளின் இயல்புகள்தான் நிர்ணயிக்கின்றன மக்களின் தேவைகளையும்-பாதுகாப்பையும் நிறைவேற்றக் கூடிய சித்தாந்தங்களை செயற்படுத்தும் நோக்குடன் போராளிகளின் கட்டுப்பாடுகள் வகை செய்தால் அவை இலட்சியப் பயண முன்னெடுப்புககளுக்கு ஊன்றுகோலாய் அமையும்.

விடுதலைப் போராளிகளுக்கிடையே-பரஸ்பர நம்பிக்கை சகோதர உணாவு இவைகள் வேரூன்றும் போது - மனித நேயம் போராளிகளின் மனோபாவங்களில், அவர்களின் செயல்களில் ஊற்றெடுக்கிறது.

போராளிகளுக்கிடையேயுள்ள கூட்டு உணர்வு, பரஸ்பரம் உதவிசெய்யும் மனப்பாங்கும் வலுப்பெறும் போது -சமத்துவவாய்ப்புக்கள் தார்மிக நிலைகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. புதிய சமுதாயத்தை கட்டியெழுப்ப முனையும் போராளிகளுக்கு இவை ஊட்டச்சத்துக்களாகின்றன.

பொறுமை ஆணவம், அதிகாரக் குணம்-இவற்றிலிருந்து வீடுவிக்கப்பட்டு மனிதாபிமான உணர்வில் போராளிகள் உருவாக்கப்படும் போது அழிவுப்பாதையை நோக்கிச் செல்லும் போராட்ட அணுகுமுறைகள் பாதுகாக்கப்பட்டு ஆக்க பூர்வமான செயல் திட்டங்களில் முன்னேறிச் செல்லும் வேகம் துரிதப்படுத்தப்படுகின்றன.

போராளிகள் உப்யோகிக்கின்ற ஆயுதங்களும், மற்றும் உபகரணங்களும் நிறைவேற்றப்படுகின்ற கடமைகளும் மக்களின் நலனுக்காக வே துணை நிற்க வேண்டும். அது வலிமைமிக்க மக்கள் சக்தி அணிதிரளும் வாய்ப்பை அதிகப்படுத்தும்.

மக்களுக்கும் விடுதலைப் போராளிகளுக்குமிடையேயான உறவு ஒத்திசையான தன்மை கொண்டதாயிருக்க வேண்டும். போரின் தேவையையும், முறையையும் மக்கள் கிரகிக்கும் வரையில் போராளிகள் தங்கள் பலவீனங்களைத் தவிர்த்து பலத்தை உறுத்திப்படுத்தவேண்டும்.

மக்களே போராளிகளின் மிகப்பெரிய சக்தி எனவே அவர்களுக்கு அரசியல் விழிப்பை ஏற்படுத்தும் காரியத்தை இடைவிடாமல் செய்தல் வேண்டும். மக்கள் தங்கள் நிலைபற்றியோ-சக்திபற்றியோ தெளிவு ஏதுமற்று உள்ளவரை விரோதிகன் அவர்களை ஆட்கொள்வான், ஆகையால் போராளிகள் விழிப்பாயிருக்க வேண்டும்.

கூட்டு அமைப்பிலிருக்கும்-நேசப்பான்மையான வளர்ச்சி-போராளிகள் புரட்சிப்பணிகளை, கடமைப் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வது போராட்டத்தை ஊககுவிக்கும்-ஜீவனுள்ள உயிரணுக்கள் ஆகும்,

## எழுச்சி

சென்ற மாத எழுச்சி இதழ்களை பாராட்டி நூற்றுக்கணக்கான கடிதங்கள் எமக்கு வந்து குவிந்தன. கடிதங்களை பக்கங்கள் போதாமையால் பிரசுரிக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம். இவை போன்ற உங்களது ஊக்கமே எங்களை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும்.

மற்றும், சகல பகுதிகளிலும் எழுச்சி விற்பனையை ஊக்குவித்து ஜெயவர்த்தன அரசின் முகமூடியை கிழித்தெறியும் அனைத்துத் தோழர்களும் எமது புரட்சிகர நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவை தவிர எமக்கு சகல வழிகளிலும் பொருளுதவி பண உதவி உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கிவரும் அனைத்து மக்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி

பத்திரிகை குழு

தொடர்புகட்கு-
S. தயானந்தன்
35/3 வெல்கம் காலனி,
சென்னை-600 101
தெ இந்தியா.

படிப்பகம்

www.padippakam.com

# பிற்போக்கு வடுக்களின் பிரித்தாளும் கோடுகளை முறியடிப்போம்

சார்வதேச அரசியலுடனும் இந்த சமுத்திரப் பகுதி பூகோள அரசியலுடனும் நிபந்தனையற்று - பிணைக்கப்பட்டு விட்ட எமது விடுதலைப் போராட்டத்தை...

தடைகளையும், துயரங்களையும், தோல்விகளையும், இழப்புக்களையும் தாங்கி அப்பாற் செல்லக் கூடிய தார்மீக வலுவைப் பெற்றுவிட்ட எமது விடுதலைப் போராட்டத்தை...

பாழ்பட்டுப் போன பழஞ் சமூகத்தை பிளந்தெறிந்து புதியுகம் படைத்திட புறப்பட்ட எமது விடுதலைப் போராட்டத்தை...

அரைகுறையாக அணைத்துவிட சில அசிங்கமான முகங்கள் முயன்று வருகின்றன.

உலக சண்டித்தனக்காரர்களின் ஊட்டச் சத்து ஊட்டி வளர்க்கப் பட்ட அந்தச் செல்லப்பிள்ளைகளின் செல்வச் செழிப்புகள் எமது விடுதலைத் தீயில் கருகிப் போகும் என்ற கலக்கமே அவர்களது கடுகதி வேகத்திற்கு காரணமாகும்.

"வடக்கு, கிழக்கு இணைப்பு வேண்டும் என கிழக்கு மாகாணத்தில் சிலர் கோருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் தனியாட்சி அமைக்க முதுகெலும்பு இல்லையா என்று அவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன்.... வடக்கில் 90.|• தமிழ் மக்கள் உள்ளனர். ஆனால் கிழக்கில் 03 இனத்தவர்களும் வாழ்கிறார்கள்..." என்றொரு குரல் ஒலிக்கிறது.

"8 இலட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்களில் ஏற்கனவே பாதிப்பேருக்கு குடியுரிமை - வழங்கப்பட்டுவிட்டது. மீதிப் பாதிப்பேருக்கு அடுத்த டிசம்பர் மாதத்திற்குள் குடியுரிமை கிடைத்துவிடும்... 6 லட்சம் தோட்ட தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும் அல்லது தற்போது அவர்கள் வசிக்கும் வீடுகளுக்கு அவர்களே சொந்தக்காரர்களாக்கப்படுவர்... தோட்ட தொழிலாளர் பகுதியில் இனப் பிரச்சனை என்பது இதுவரை ஏற்படவில்லை. கடந்த வாரம் நடைபெற்ற சண்டைகள் யாவும் தனிப்பட்ட சண்டையேயாகும்... ஈழத் தமிழர்களது போராட்டத்திற்கு - இந்திய வம்சாவளித் தமிழர்கள் தார்மீக ஆதரவு அளிக்க முடியுமே தவிர, அவர்களுடைய போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட முடியாது..." என இன்னொரு குரல் ஒலிக்கிறது.

"முஸ்லிம்கள் தனித் தேசிய இனம். தமிழர்களுடன் அவர்கள் சேர்ந்து வாழ முடியாது. 'அவர்களுடைய போராட்டத்தில் ஈடுபட முடியாது..." என மற்றோர் குரல் ஒலிக்கிறது.

இவையாவும் எமது போராட்டத்தை சீர் குலைக்க சிறீலங்கா அரசாங்கம் எடுக்கும் சதி நடவடிக்கைகளின் ஓர் அங்கமேயாகும்.

இவற்றையடுத்து, மத அடிப்படையில் தமிழ் பேசும் மக்களை மோதவிட்டு, பிளவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட கல்முனை பகுதிகளில் திட்டமிட்ட முறையில் மோதல்கள் தூண்டிவிடப்பட்டன இச் சதி நடவடிக்கைகளுக்கு நம் மத்தியில் உள்ள சில அரை குறைகளும் துணை போயிருக்கின்றன.

09. 08. 1986ல் ஒரு இஸ்லாமிய தமிழ் சிறுவன் கடத்தி கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து மோதல்கள் வெடித்தன. இவற்றையடுத்து தமிழர்களது வீடுகள் கொளுத்தப்பட்டன. தமிழர்கள் தாக்கப்பட்டனர். இதில் 35 வீடுகள் முற்றாக எரிந்ததோடு, ஒரு தமிழர் கொல்லப்பட்டும் - ஒரு தமிழர் காயமடைந்தார்.

10. 08. 1986ல் மூன்று தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர்.

11. 08. 1986ல் இரு பெண்கள் உட்பட மூன்று இஸ்லாமிய தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். இவற்றை தொடர்ந்து பல தமிழர்கள் கடத்தப்பட்டனர் கடத்தப்பட்டவர்களில் ஒருவரது சடலம் ஒந்தாட்சி மடம் என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. மதுளி கரவெட்டியை சேர்ந்த இவரது பெயர் அழகரத்தினம் சின்னத்தம்பி.

தொடர்ந்து, கல்முனையில் இஸ்லாமிய தமிழர் ஒருவருக்கு சொந்தமான அரிசி ஆலையில் வேலை செய்யும் 03 தமிழ் தொழிலாளர்களின் சடலங்கள் 13. 08. 1986 மாலை பட்டிருப்பு கடற்கரைக்கு அண்மையிலுள்ள மயானத்தில் ஒதுங்கின. இதே அரிசி ஆலையில் கடமையாற்றும் - மேலும் இரு தமிழர்களது சடலங்கள் 14. 08. 1986ல் மருதாவனை கடற்கரையிலும் - பெரிய நீலாவணை கடற்கரையிலும் ஒதுங்கின.

சமாதானக்குழு தலையிட்டதன் விளைவால் இம்மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன.

இதனிடையே, இம் மோதலுக்கு துணை போனதாக தனது 03 உறுப்பினர்களுக்கு தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) மரண தண்டனை நிறைவேற்றியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த 03 உறுப்பினர்களின் உடல்களும் கல்முனை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு முன்னால் விளக்குக் கம்பங்களில் 13. 08. 1986ல் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் தங்கள் (PLOT) இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்ற போதிலும் மோதலுக்கு துணை போனதன் மூலம் இயக்க ஒழுக்க விதிகளை மீறியதற்காக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அருகில் காணப்பட்ட 'போஸ்டர்'களில் குறிப்பிட்டிருந்தது.

பிரித்தாளும் தந்திரோபாயத்திற்கு துணை போகும் எம் மத்தியில் உள்ள அனைவரும் அடையாளம் காணப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் இருந்து தனிமைபடுத்தப்பட வேண்டியவர்களே.

சிறீலங்கா அரசின் பிரித்தாளும், சூழ்ச்சிக்கு முண்டு கொடுக்கும் துரோகத் தலைமைகளுக்கு, சிறீலங்கா அரசின் பேரினவாத ஒடுக்குமுறையானது வடக்கு - கிழக்கு - மலையக - இஸ்லாமிய மக்கள் என்ற வேறுபாடில்லாமல் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் அனைவரையுமே பழிவாங்குகிறது என்பது நன்றாகவே புரியும். ஆனால் அவர்களுக்கு பண முடிச்சுகளும், பதவி நாற்காலிகளும் தான் முக்கியம்....

இவர்களது வீராவேச பேச்சுக்களும்..., அறிக்கைகளும்... வெளியாகும் போதும் -

கிழக்கு மாகாணம் சுடுகாடாக மாறிக் கொண்டிருக்கிறது...

பல புதிய இராணுவ முகாம்கள் அங்கு அமைக்கப்படுகின்றன.

தினமும் 10க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்படுகின்றனர்.

நாளாந்தம் 25க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்படுகின்றனர்.

மலையகப் பகுதியில் —

தலவாக் கொலை தோட்ட தொழிலாளர்களது வசிப்பிடங்கள் மீது சிங்கள காடையர்கள் தாக்குதல் நடாத்தி 44 குடும்பங்களை அகதிகளாக்கியது. வட்டக்கு புரங்காவில் தோட்டத்தை சேர்ந்த தமிழ் அதிகாரிகள் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர். பந்துலய பகுதியில் தொழிலாளர்களது குடியிருப்புக்கள் சிங்கள ஊர்க்காலிகளால் தாக்கப்பட்டன. தமிழர்கள் ஏறிச்சென்ற பஸ் ஒன்றிற்கு தீ வைக்கப்பட்டது கூண்டுலோயா பகுதியில் 35 தொழிலாளர்களது குடிமனைகளும், 28 தமிழர்களது கடைகளும் முற்றாக எரிக்கப்பட்டன. 12 தமிழ் இளைஞர்கள் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர். வட்டவளைப் பகுதியில் உள்ள கரோலினா அரசு தோட்டத்தில் ஒரு தமிழ் அதிகாரி உட்பட 11 தோட்ட தொழிலாளர்கள் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர். பூண்டுலோயா பகுதியில் தோட்ட தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். 700 க்கும் மேற்பட்ட தோட்ட தொழிலாளர்கள் அகதிகளாக்கப்பட்டு சிங்கள மகா வித்தியாலயத்திலும் — பௌத்த விகாரையிலும் தஞ்சம் அடைந்தனர். அகதிமுகாம்களிலும் சிங்கள காடையர்கள் தாக்குதலை நடாத்தினர்.

24. 06 1986ல் யாழ் முஸ்லிம் பகுதியில் சிறீலங்கா ஆயுதப்படை விமானங்கள் நச்சுக் குண்டுகளை பொழிந்தன.

01. 07. 1986ல் மன்னார் பேசாலைக் கடலில் மீன பிடித்துக் கொண்டிருந்த இஸ்லாமிய தமிழர்கள் சிறீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டனர் இதில் 06 இஸ்லாமிய தமிழர்கள் கொல்லப்பட்டதோடு, 11 பேர் காயமடைந்தனர்.

27. 07. 1986 சாய்ந்த மருதுவில் முஸ்லிம் கர்ப்பிணித்தாய் ஒருவரை அவசரமாக ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு சென்ற கார் மீது ஊர்காவல் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கார் சேதமடைந்ததோடு, பிரயாணம் செய்த அனைவரும் படுகாயமடைந்தனர்.

06- 08- 1986ல் வவுனியாவில் உள்ள முஸ்லிம் கிராமம் ஒன்றை முற்றுகையிட்ட ஊர்காவல் படை









படிப்பகம்

www.padippakam.com

யினர் காடைத்தனத்தில் இறங்கினர், இது தொடர்பாக பிரஜைகள் குழுத்தலைவர் ஜனுப் அப்துல்லா வவுனியா பொலிசில் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவையாவும் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் அனைவரையும் ஒன்றுதிரள வழிவகுக்கும் என்பதால்தான் தமது பாதந்தாங்கிகளை பாவித்து தமிழ் பேசும் மக்களை பிளவு படுத்த சிறிலங்கா அரசு அவ்வப்போது முனைகிறது.

தோட்ட தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை அளிக்கப்பட்டதை தூக்கி காட்டும் அவர்கள் அதற்கான அரசியல் காரணங்களை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

சிறிலங்கா அரசின் அலங்கோல நிலையே, அவல நிலையை தோட்ட தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்ப்படுத்தியது. (சிறிலங்கா அரசின் அலங்கோல நிலை பற்றி பேச்சு வார்த்தையின் பின்னணியில்... என்ற கட்டுரையில் முழுமையாக விளக்கியுள்ளோம்)

சிறிலங்கா அரசு தனது நெருக்கடி நிலைக்கு தற்காலிக முட்டுக்கட்டை கொடுக்க வேண்டிய நிலமைக்கு மத்தியில் தான் தமிழர் பிரச்சனையை தீர்க்க வேண்டிய நிலைமை உருவாகியது. தமிழர் பிரச்சனைக்கு தீர்வு என்பது இந்தியாவின் அனுசரனையுடனே கைகூடும் என்பதை சிறிலங்கா அரசு நன்கு அறியும். இதற்காகவே அதாவது இந்தியாவை திருப்திப்படுத்தவே தோட்ட தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது இந்திய அரசு, தமிழக அரசு ஆகியவற்றின் உதவியின்றி இனப்பிரச்சனைக்கு நாம் தீர்வு - காண முடியாது... என ஜெயவர்த்தன அண்மையில் பேசியிருந்தது இதற்கோர் உதாரணமாகும். இவற்றையெல்லாம் மூடி மறைத்து தோட்ட தொழிலாளர்களது புரட்சிகர குணம்சங்களை மழுங்கடிக்க முனைகின்றன பதவிக்காக அலையும் பிசாசுகள்.

இவர்களது சதிராட்டங்கள் அனைத்தையும் புரிந்து கொண்டு தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஆயிரக் கணக்கான முஸ்லிம் மக்களும் - மலையக மக்களும் தமிழ் ஈழ விடுதலைக்காக போராடுகிறார்கள். சிறிலங்கா அரசினது அழுகிப்போன கலாச்சாரத்தால் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் ஏனைய





மக்களையும் மீட்டெடுத்து தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்திட அல்லும் பகலும் — உழைக்கிறார்கள்.

ஜெயவர்த்தனவின் புதிய பிரேரணைகள் சம்பந்தமாக இஸ்லாமிய தமழர் அமைப்புகள் வெளியிட்ட அறிக்கைகள் இதற்கோர் உதாரணமாகும்.

''வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழ் மொழி மாநிலத்தின் மூலமே இஸ்லாமிய - தமிழர்களின் நிலத்தை எதிர்காலத்தில் காப்பாற்ற முடியுமேயன்றி கிழக்கில் முதலமைச்சர் பதவியை - இஸ்லாமிய தமிழர் பெறுவதினுல் காப்பாற்றிவிட முடியாது.

முன்னர் மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட போது அம்பாறை மாவட்டம் இஸ்லாமியத் தமிழர்களின் மாவட்டமாகவே இருந்தது. ஆனுல் இன்று அது சிங்களவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டு விட்டது. அரசாங்கத்தில் மூன்று இஸ்லாமிய அமைச்சர்கள் இருந்தும் அவர்களால் கிழக்கில் இஸ்லாமியத் தமிழர்களிடம் இருந்து நிலங்கள் பறிபோனதைத் தடுக்க முடிந்ததா?

இந்நிலையில் கிழக்கு மாகாண இஸ்லாமியத் தலைவர்கள் முதலமைச்சர் பதவி வேண்டுமெனக் கோருகின்றனர். இதனைப் பெரும்பான்மைச் சிங்கள இனத்தில ஆதரவுடன் பெற்றுக் கொள்ளலாம் என எண்ணியுள்ளனர். ஆனுல் ஒரு சில ஆண்டுகளின் பின்பு கிழக்கு மாகாணம் சிங்களவர்களின் கைகளுக்கு மாறிவிடும். இதனை ஏன் இஸ்லாமியத் தலைவர்கள் உணர மறுக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

இஸ்லாமியத் தமிழர்களினதும் ஏனைய தமிழர்களினதும் இணைப்பில் தான் இஸ்லாமியத் தமிழர்களின் பாதுகாப்பும் உத்தரவாதமும் கிடைக்குமேயன்றி சிங்கள இனத்துடன் இணைவதால் அல்ல. அவ்வாறு சிங்கள இனத்துடன் இணையும் பட்சத்தில் எமது இனம் சிங்கள இனத்தால் ஜீரணிக்கப்பட்டுவிடும்

இவ்வாருன ஆபத்துக்களில் இருந்து இஸ்லாமிய தமிழ் மக்களை காப்பாற்ற இஸ்லாமிய தமிழர் — தலைவர்கள் ஆழமாகவும், தூரநோக்குடனும் சிந்தித்து செயல்பட வேண்டும்.

- இவ்வாறு அக்கரைபற்று பிரஜைகள் குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதே போல கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் -

'கிழக்கு வடக்கு மாகாணங்கள் ஒன்றிணைப்பதற்கு அப்பிரதேசங்களில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள், அதற்கு ஆதரவு கொடுக்காமல் இருப்பது ஒரு முட்டுக் கட்டையாக இருக்கிறது. பல வருடங்களாக பெரியதோர் போராட்டம் நடாத்தி அப்போராட்டத்தில் பல உயிர்த் தியாகங்களும் பொருட் தியாகங்களும் செய்பவர்கள் தம் இலட்சியகதை ஓரளவேனும் பெறுவதற்கு இஸ்லாமிய தமிழர்கள் எக்காரணம் கொண்டும் முட்டுக் கட்டையாகவோ இடைஞ்சலாகவோ இருக்கக கூடாது என்பதே எமது ஏகோபித்த முடிவாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இஸ்லாமிய தமிழர்களும், மலையக தமிழ் மக்களும் தமது துரோகத தலைமைகளின் கடந்த கால, நிகழ்கால பிற்போக்கு நடவடிக்கைகளை அடையாளம் கண்டு ஏனைய தமிழ் மக்களுடன் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து, புரட்டல்வாதிகளை இனங்கண்டு போராடுவதன் மூலமே அனைவரதும் எதிர் காலத்தை சுபீட்சமானதாக நிர்மாணிக்க முடியும்.

# பேச்சு வார்த்தையின் பின்னணியில்....

''இனப்பிரச்சனைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும்; இல்லையேல் அப்பாவி மக்கள் பெருந்துன்பங்கள் அனுபவிக்க நேரிடும்... சகல தமிழர்களும் கொல்லப்பட வேண்டும் எனக் கேட்டு எனக்கு கடிதம் ஒன்று கிடைத்தது; அது தவருனது; செய்வதற்கு கஷ்டமானது கூட., இலங்கையில் அமைதியும், இணக்கமும் ஏற்படும் என்பதற்கான நம்பிக்கை காற்று இலங்கை முழுவதும் வீசுகிறது....''

''இனப் பிரச்சனைக்கு இராணுவ தீர்வுகாண்பதில் நாம் வெற்றி கொள்ளவில்லை. இராணுவ நடவடிக்கைகள் மேலும் குழப்பத்தை ஏற்ப்படுத்தும்; அதனை வைத்து தீவிரவாதிகள் வென்றுவிடுவார்கள்...''

''தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக தயாரிக்கப்பட்ட நகல் மசோதாவில் மாகாண-கவுன்சில்களுக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதாது; இன்னும் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்...''

இவ்வாறு முறையே சிறீ லங்கா அதிபர் ஜெயவர்த்தனவும் - சிறீலங்கா தேசிய பாதுகாப்பு மந்திரி லலித் அத்துலத் முதலியும்-சிறீலங்கா நிதி மந்திரி றொனிடி மெலும்- சிறீலங்கா நீதி மந்திரி நிஜங்க விஜயரத்தினவும் அண்மைக் காலமாக பேசிவருகிருர்கள்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அதி அவசரமாக தீர்வுகாண வேண்டிய நிலைக்கு UNP அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டதே இவர்களது இப்பேச்சுக்களுக்கு காரணமாகும்.

இலங்கையில் ஏற்ப்பட்டுள்ள பொருளாதார சரிவும், அமெரிக்காவின் மாறுபட்ட போக்குமே இலங்கை இனப்பிரச்சனையை அதிவேகத்தில் தீர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் UNP அரசிற்கு ஏற்படக்காரணமாகும்.

தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான வன்முறையாலும், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான யுத்த செலவீனத்தாலும் இலங்கையின் பொருளாதாரம் அடியோடு ஆட்டம் கண்டது. இதனை தற்காலிகமாவது தடுத்து நிறுத்தாவிடின் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றி கொள்ளப்படுவது மட்டுமல்ல, சிறீலங்காவிலும் முதலாளித்துவம் குழி தோண்டிப் புதைக்கப்படும்.

UNP அமைச்சர்களது கூற்றுக்கள் இந்த உண்மையை தெளிவுபடுத்தும்.

சிறீலங்கா நிதி அமைச்சர் றொனிடிமெல் சிறீலங்கா பாராளுமன்றத்தில் பேசும் போது-

''வடக்கிலும், கிழக்கிலும் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தினுல் நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின்னேக்கி தள்ளப்பட்டிருக்கிறது அது முன்போல் சகஜ நிலையை அடைய இன்னும் குறைந்தது 10 வருடங்கள் ஆகும். தமிழ் தீவிரவாதிகளுடன் அரசு ஒரு தீர்வுக்கு உடனடியாக வரவேண்டும். அப்போது தான் பொருளாதாரம் இன்னும் பத்து வருடங்களில் நிறைவு பெறும், இல்லையேல் அது சாத்தியமில்லை...''

''நாட்டின் வரவு செலவு திட்டத்தில் நாட்டின் வருமானத்தைக் காட்டிலும் செலவு மிகவும் கூடுதலாக உள்ளது. அத்தோடு வரவு செலவுத் திட்டத்தின் பற்ருக் குறை மிகவும் அதிகமாகியுள்ளது. நாட்டின் வருமானத்தில் 60% இற்கு மேல் இராணுவ தளபாடங்களுக்கு செலவு செய்ய வேண்டியுள்ளது...''

''நாட்டின் பற்ருக்குறைக்கு முக்கிய காரணம் இராணுவ செலவீனமாகும். நாட்டின் மொத்தச் செலவில் 10% ற்கு மேல் இராணுவச் செலவு உள்ளது. மேலும் சிறீலங்காவில் கடந்த இரண்டு வருடங்களில் வெளிநாட்டு முதலீடுகள் வெகுவாக குறைந்துள்ளது. நாட்டின் பணவீக்கம் அதிகமாகியுள்ளது நாட்டின் அத்தியாவசிய பண்டங்களின் விலைகள் அதிகமாக உயர்ந்துள்ளது –

''எமது நாட்டில் குறைந்து போன வெளிநாட்டு முதலீடுகள், உலக வங்கியல் எமது கடன்கள், வெளிநாட்டில் மதிப்புக் குறைந்து போன எம் நாட்டின் நாணய மதிப்பு இவற்ருல் நாட்டின்-பொருளாதாரம் மிகவும் கீழிறங்கி விட்டது சிறீலங்கா வாங்கிய வெளிநாட்டு கடன்களுக்காக செலுத்தப்படும் வட்டி வீதம் 1983 இற்கு முன் 8% ஆகவும், 1984ல் 19% ஆகவும், 1985ல் 25% ஆகவும்-உயர்ந்துள்ளது இவ்வட்டி வீதம் 1986ல் மேலும் இரண்டு மடங்காக உயரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது...''

''நாட்டின் வருமானத்தை முன்னேற்றுவதற்காக ஜெயவர்த்தன அரசால் உருவாக்கப்பட்ட வரி விலக்கு வியாபார சந்தை மற்றும் சுதந்திர வர்த்தக வலயம் 1980 இலும், அதற்கு முன்னுலும் நல்ல வருமானத்தை கொடுத்தது. அதற்குப்பின் 1983ல் நடைபெற்ற இனக் கலவரம், தமிழ் தீவிரவாதிகளது தாக்குதல் இவற்ருல் அதன் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு இப்பொழுது இலாபம்-இல்லாத சூழ்நிலையில் இயங்கி வருகிறது...''

இவ்வாறு றொனிடி மெல் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அமெரிக்காவில் வெளியாகும் டைம்ஸ் சஞ்சிகைக்கு நிதி அமைச்சர் றொனிடி மெல் பேட்டியனிக்கையில்-

''கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் எமது நாடு ஒவ்வொரு மாத

படிப்பகம்

www.padippakam.com

மும் 30-40 வரையிலான வெளி நாட்டு முதலீடுகளை பெறும். ஆனால் இப்பொழுதோ ஒவ்வொரு மாதமும் 05 வெளிநாட்டு முதலீடுகளை பெறுவதென்பதே முடியாத ஒன்றாக உள்ளது..."

"1984க்கு முன்னர் நாட்டின் வருமானத்தில் 40 வீதத்தை வெளி நாட்டு சுற்றுலாப்பயணிகளின் மூலம் பெற்றுக் கொண்டோம். ஆனால் இப்பொழுதோ அவ்வருமானம் 80 வீதத்தால் குறைந்து விட்டது..."

இவற்றிற்கு முக்கிய காரணம் 1983ல் நடைபெற்ற இனப்படுகொலையும் அதனைத் தொடர்ந்த தமிழ் தீவிரவாதிகளது தாக்குதலுமாகும்.

இவ்வாறு பேட்டியில் றொனிடிமெல் குறிப்பிட்டார்.

கொழும்பில் வெளியாகும் "சண்டே அப்சர்வர்" என்ற இதழ் கூறுவதாவது-

"இலங்கையின் முக்கிய ஏற்றுமதி தேயிலை-இறப்பர்- தேங்காய் ஆகும். பன்னாட்டு வியாபாரச் சந்தையில் இவற்றின் விலை வெகுவாக குறைந்து விட்டபடியால், 1985க்குப் பின்னர், இவற்றிலிருந்து கிடைத்த வெளிநாட்டு வருமானம் மிகவும் குறைந்து விட்டது..."

"கொழும்பில் தேயிலை வெளிநாட்டு கொம்பனிகளுக்கு ஏலம் விடுகையில், 1986 ஏப்ரல்-முதல் வாரத்தில் ரூபா 30-08 ஆக குறைந்து மே மாதத்தில் ரூபா 29-40 ஆக வீழ்ச்சியுற்றது இவ்விலை இறக்கமும் நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாக பாதித்துள்ளது..."

-இவ்வாறு அப்பத்திரிகை கூறியுள்ளது

அரசுக்கு சொந்தமான மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில்:

"நாட்டின் பொருளாதாரத் தேவை, அடிப்படைப் பொருட்களின் தேவை உள்நாட்டு உற்பத்தியைக் காட்டிலும் 6% அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் நாட்டின் அமைதியின்மையாகும்"

"வடக்கிலும், கிழக்கிலும் இருந்து வரக்கூடிய உற்பத்திப் பொருட்கள், விளை பொருட்களின் அரசுக் கொள்வனவு 1984ல் 5.1% குறைந்தது. அது 1985ல் 5.3% ஆகவும் குறைந்தது. இது 1986ல் மேலும் பன்மடங்காக அதிகரிக்கும்..."

"1984ல் தேயிலையின் விலை 49·/. ஆக இருந்தது அது 1985ல் 26·/. ஆகி, 1986ல் 23·/. ஆக வீழ்ச்சியுற்றது..."

"நாட்டின் தொழில் உற்பத்தி 1984-1986 வரை 5·/. தான் உயர்ந்துள்ளது..."

"நாட்டின் வியாபாரப் பற்றுக் குறை 1984ல் 9.9 பில் ரூபாவாக இருந்தது அது 1985ல் 14. பில் ரூபாவாக உயர்ந்துள்ளது..."

"நாட்டின் உள்ள அமைதியின்மையால் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது"

"இந்த வருடம் ஜெயவர்த்தனா அரசு பாகிஸ்தான் மற்றும் சீனாவிடம் இருந்து 1.80முதல் 2.30வரையிலான மெட்ரிக் டொன் அரிசியை இறக்குமதி செய்தது. ஆனால் இவ்வருடம் மட்டும் நாட்டில் மேலும் 1,00,000 டன் அரிசி அத்தியாவசியமாக தேவைப்படுகிறது, இது தொடர்பாக உணவு அமைச்சகம் அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளது..."

-இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவைதவிர, 1986 - ஏப்ரலில் IMF என்ற நிதி வழங்கும் நிறுவனமும் ஜெயவர்த்தனா அரசை எச்சரித்துள்ளது. சிறீலங்காவில் தொடர்ந்து கீழிறங்கிவரும் பொருளாதாரத்தால்-இனி அந்நிறுவனம் சிறீலங்காவிற்கு நிதி வழங்குவதை இவ்வருடத்துடன் நிறுத்திக் கொள்ளும் என்று கூறியுள்ளது

இவற்றோடு, இலங்கை இனப் பிரச்சனை தீர்ந்தாலே அதன் அபிவிருத்தி சகல துறைகளிலும் வளர்ச்சி அடையும் என உலக வங்கியின் பிரதம பணிப்பாளர் பாரி

# நிதியின் தாக்கம் புரட்சிப் பாதையில்....

தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தை சீர்குலைக்க ஜெயவர்த்தனா அரசாங்கமும் அதன் எஜமானர்களும் அதி தீவிரமாக இறங்கியுள்ளனர். பேச்சுவார்த்தையை ஒருபுறம் நடாத்திக் கொண்டு மறுபுறம் எமது மக்களை கொன்று குவிக்கின்றனர். இவர்களது இச்சதி நடவடிக்கைகளை முறியடித்து, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முற்போக்கான பாதையில் கொண்டு செல்ல எமக்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. எமது மக்களின் விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரும் மானுடத்தை நேசிக்கும் அனைவரும் உங்களால் இயன்ற நிதி உதவியை, பொருள் உதவியை வாரி வழங்குங்கள்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி

K. ANANDAN
A/C No. 11506
INDIAN OVERSETS BANK.
BRANCH VIRUGAMBAKKAM
MADRAS — 600 092
S. INDIA.

சில் (FRANCE) சிறீலங்கா-வெறியுறவு அமைச்சர் ஹமீத்திடம கூறியுள்ளாது.

உலகவங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன வேலைகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. உலக வங்கி நிதியுதவி வழங்க மறுத்ததே இதற்குக் காரணமாகும். இரணைமடு திட்டத்தின் திருத்த வேலைகளுக்கென உலக வங்கியால் கொடுக்கப்பட்டுள்ள நிதியும் நிறுத்தப்பட்டுள்ளது. 270 லட். ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததில் 95 லட். ரூபா கடந்த ஜூன் வரை செலவிடப்பட்டது.

இத்தோடு, உல்லாசப் பிரயாணிகளின்வரவின்மையால் நியூயோர்க்-ஜப்பான்-அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளால் இலங்கையில் அமைக்கப்பட்ட உல்லாசப் பிரயாணிகளின் அலுவலகங்களும் கடந்த ஜூலை மாதத்தில் மூடப்பட்டன.

இதனாலேயே இனப் பிரச்சனைக்கு உடனடி தீர்வுகாண வேண்டிய நிர்பந்தத்திற்கு சிறீலங்கா அரசு தள்ளப்பட்டது.

ஜெயவர்த்தனாவின் சமீப கால பேச்சுக்கள் இந்த உண்மையை மேலும் தெளிவுபடுத்தும்.

இரத்தினபுரியில் இவர் பேசும் போது, இரு தரப்பினரும் துப்பாக்கியால் மோதும் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணப்படாவிட்டால் நாடு மிக நெருக்கடியான நிலைக்கு தள்ளப்படும் என்றார்.

கொழும்பில் பேசும் போது, இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை நடைபெறுவதால் இலங்கையைப் பற்றிய வெளிநாடுகளின் தப்பான அபிப்பிராயம் குறைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

களனியில் பேசும் போது, சிறுபான்மையினரை கொல்ல முனைபவர்களே இலங்கைக் கயவர்கள் என்று வெளிநாடுகளில் நிலவி வந்த அவப் பெயர் இப்போது மறைந்து வருகிறது. இதனால் நிதி உதவியும் பெறக் கூடியதாக உள்ளது என்று கூறினார்.

இவைதவிர, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மாறுபட்ட போக்கும் ஒரு காரணமாகும்

பிலிப்பைன்ஸ் பாணியில் திருமதி பண்டாரநாயக்காவை ஜனாதிபதியாக்க அமெரிக்கா முயன்று வருவதாக நம்பப்படுகிறது.

சிறீலங்காவை பொறுத்த வரை, ஜெயவர்த்தனாவினது பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் படி அரசை நீடிப்பதற்கான காலக்கெடு முடிவடைவதற்குரிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பொதுத் தேர்தலை உடனடியாக நடாத்தும் படி சிறீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட அனைத்து எதிர் கட்சிகளும் வலியுறுத்துகின்றன. நடைபெற்று முடிந்த இடைத் தேர்தல்களிலும் UNP கட்சி தனது ஆதரவை இழந்துள்ளது.

இந்த நிலையில் தான், அமெரிக்கா சிறீலங்காவின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்கிறது. அமெரிக்காவை பொறுத்தவரை, ஜெயவர்த்தனாவிற்கு போட்ட ஜனநாயக முகத்திரை பழசாகிப் போய்விட்டது அது எப்பொழுதும் கிழித்தெறியப்படலாம். அந்த முகத்திரைக்கு பின்னால் மறைந்துள்ள கோரமான ரத்தக் கறை படிந்த டாலர் முகத்தை தமிழ் ஈழ மக்கள் பார்த்தது போல சிறீலங்கா மக்களும் பார்க்கக் கூடும். அதனால் மாற்று முகத்திரையை தயாரிக்க வேண்டிய - அவசரம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

இன்று அரசியல் உரிமைகளோடும், அசாத்திய மக்கள் பின்னணி என்ற பலத்தோடும் தலை நிமிர்ந்து நிற்கும் திருமதி பண்டாவின் முகத்தை இதில் புகுத்துமா?

இலங்கையில் மனித உரிமைகள் மீறல் உள்ளது என்ற அமெரிக்க இராஜாங்கப் பிரிவினது அண்மைய கண்டுபிடிப்பும், சிறீலங்காவிற்கான அமெரிக்க உதவிகள் குறைக்கப்பட்டதும் அமெரிக்காவின் அவசரத்தை மேலும் வெளிப்படுத்துகிறது.

இத்தகைய நிலமைகளில் தான் தமிழ் ஈழப் போராட்டச் சிக்கலை எப்படியேனும் தீர்க்க வேண்டிய அவசரம் UNP அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால் UNP அரசின் புதிய பிரேரணைகளை விடுதலை அமைப்புகள் முற்றாக நிராகரித்துவிட்டன.

இந்த நிலையில் தமிழ் ஈழ மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய பிரேரணைகளை ஜெயவர்த்தனா அரசால் நிச்சயமாக முன்வைக்க முடியாது.

எனவே, பேச்சுவார்த்தைகள் என்று சில காலங்களை இழுத்தடிப்பது; உலக நாடுகளின் உதவியை பெறுவது; பின்னர் பேச்சுவார்த்தையை குலைப்பது அல்லது இலங்கையை இராணுவத்திடம் கையளிப்பது இவற்றைத் தவிர ஜெயவர்த்தனாவால் வேறொன்றையும் சாதிக்க முடியாது.

தமிழ் ஈழப் பகுதிக்கான இராணுவத் தயாரிப்புகள் மென் மேலும் தீவிரப்படுவது இந்த உண்மையை புலப்படுத்தும்.

31-07-1986ல் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு சுவுன்சிலின் அதி முக்கிய கூட்ட மொன்றில்-வடக்கிலுள்ள இராணுவத் தளங்கள் எக்காரணம் கொண்டும் மூடப்படமாட்டாது என தீர்மானிக்கப்பட்டதோடு இஸ்ரேலில் இருந்து புதிதாக வந்த 50 மொசாத் படையினரும் வடபகுதி முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவைதவிர, 27-06-1986ல் கப்பல்கள் மூலம் பலாலி இராணுவ முகாமிற்கு நவீன பயிற்சி-பெற்ற கொமாண்டோ பிரிவைச் சேர்ந்த 400 இராணுவத்தினர் வந்து சேர்ந்தனர்.

நவீன வசதிகள் கொண்டதும், ஆயுதங்கள் பொருத்தப்பட்டதுமான பல ஹெலிக்கப்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவை 31-06-1986 காலை வல்வெட்டித்துறையில் இராணுவ அதிகாரிகள் சகிதம் ஒத்திகை பார்க்கப்பட்டது. இவை மற்றயதைவிட சிறியதாகவும், ஓசை குறைந்ததாகவும் காணப்பட்டன, இதே தினம் பலாலி முகாமிற்கு கறுப்பு-சிவப்பு நிற விமானங்களும் மஞ்சள்-பச்சை-நீல நிறங்களையுடைய ஹெலிக்கப்டர்களும் புதிதாக வந்து சேர்ந்தன.

18-07-1986 அதிகாலை 3-00 மணியளவில் புதிதாக பீரங்கிப் படகுகளில் 500 கடற்படையினர் காரைநகர் முகாமிற்கு வந்து சேர்ந்தனர் அத்துடன் புதிய குண்டு வீச்சு விமானங்களும் பலாலி முகாமிற்கு வந்துள்ள, இதேவேளை, மன்னார். பேசாலைக் கடலில் 1000 யாருக்கு அப்பால் கறுப்பு நிற பாரிய கப்பல் ஒன்று நிலை கொண்டுள்ளது. இதனை சுற்றி 04 கடற்படைக் கப்பல்கள் வட்டமிடுகின்றன.

20-07-1986 பகல் 1-00-2-00 மணிவரை மண்டைதீவு, பலாலி இராணுவ முகாம்களுக்கு-சுமார் 300 ஆயுதப்படை கொமாண்டோப் பொலிசார் கப்பல்கள் மூலம் வந்து சேர்ந்தனர். இதே வேளை மன்னார் பகுதிக்கு விசேட ஊர்க்காவல் படையினர் வந்து சேர்ந்தனர். இவர்களுக்கு ஆயுதப் படை முகாம்களில் மேலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவைதவிர, திருமலை மாவட்டத்தில் கல்லாறு-கன்னியா-செல்வநாயகபுரம் சந்தி ஆகிய இடங்களிலும், திருமலை-பொலனறுவை மாவட்ட எல்லையில் உள்ள ருகல் வேவ-பல்லியா கொடல-சிகொல்லாவ - அங்கடில-திருலு வேவ ஆகிய இடங்களிலும் புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பிலுள்ள இருதயபுரம்-சத்துருக் கொண்டான்-ஊரணி ஆகிய பகுதிகள் அடங்கிய எல்லைகளுக்குள் புதிய இராணுவ முகாமொன்று அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

வவுனியா குடியிருப்புப் பகுதியில் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் புதிய தடை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ முகாமில் நவீன வசதிகள் அடங்கிய முதலுதவி சத்திர சிகிச்சை நிலையமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதே வேளை, யாழ் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள வீடுகள், கடைகள், காரியாலயங்கள் மற்றும் பொதுமக்கள் நுழைவாயில்கள் மூடப்பட்டு இக் கட்டிடங்களில் உள்ள சகல பொதுமக்களும் வெளியேற்றப்படாவிட்டால் யாழ் கோட்டை முகாமிலுள்ள படையினர்-பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு இராணுவத்தினர் கொண்டு வந்துள்ளனர்.

25-07-1986ல் முப்படைகளின் கூட்டுத் தலைமைத் தளபதி சிறில்-ரணதுங்க திடீரென - வவுனியா முகாம்களுக்கு விஜயத்தை மேற்கொண்டார். இதே வேளை, கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் இணைப்பதிகாரியாக பணியாற்றிய பிரிகேடியர் ரணதுங்காவும் மேலும் சில சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது வடபகுதி இராணுவ தலைமைப் பீடத்திற்கு கேர்ணல் ஜெரிசில்வா இணைப்பு அதிகாரியாகவும், கேர்ணல் திலக் பொன்னம் பெருமா இராணுவத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்,

இவை தவிர; இலங்கையின் சகல பகுதிகளில் இருந்தும் புதிதாக 1,000 பெண் பொலிசார்கள் வேலையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மற்றும்; கடந்த மாதம் 200 இராணுவத்தினரும், 52 உத்தியோகத்தர்களும் ஆயுதப் படையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அம்பாறை - தியத்தலாவ - கதுறு ஒயா - மின்னேரியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள பயிற்சி முகாம்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

எனவே, ஜெயவர்த்தனா அரசின் அந்திம காலத்தை புரிந்து கொண்டு அதனை வெற்றி கொள்ள எம்மை அமைப்பு வடிவில் மேலும் இறுக்கமாக்குவோம். புதிய வேகத்துடன் விடியலை நோக்கி விரைந்தோடுவோம்.

www.padippakam.com

# எதிர்ப்புரட்சியாளர்களை இனங்காண்போம்.

# எமது இலக்கை நோக்கி முன்னேறுவோம்




புரட்சி, போராட்டம், சுதந்திரம், விடுதலை என்பன வெல்லாம் தமிழீழத்தை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கின்றன,

புரட்சியின் தத்துவங்கள் போராட்டத்தின் மார்க்கங்கள் சுதந்திரம், விடுதலை ஆகியவற்றின் அர்த்தங்கள் சில மனிதர்களின் சித்தப்படி இங்கே திரித்துப் புரட்டப் படும் பொல்லாத நிலைமைகளில் இருந்து தம்மை விலக்கிக் கொள்ளவும் தொடங்கி விட்டன.........

தம்மைப் புரிந்து கொள்ளக்கூடிய மனிதர்களின் எண்ணிக்கை அரிதாகி விட்டதினால் அந்த ஆழமான கருத்தினங்கள் ஈழப் போராட்டத்தின் நிலைகளிலிருந்து நகர்ச்சியடையத் தொடங்கியுள்ளன

சுதந்திரத்தின் நினைப்பினிலே கொடிய இன்னல்களையும், இழப்புக்களையும் சுமைகளாக ஏற்றுக்கொண்டு மனவைராக்கியத்துடன் சுபீட்சமான விடியலை நோக்கியிருந்த ஈழத்து மக்களின் உறுதியான நினைப்புக்கள் மே மாதத்து சம்பவங்களால் உடைக்கப்பட்டு... ஒதுக்கப்பட்டு விட்டன.

ஈழப் போராட்டத்தின் மீதான மக்கள் சக்தி எதிர்பார்திராத அடிகளுக்கும், அதிர்ச்சிகளுக்கும் உள்ளாயிற்று.

விசை கொடுத்து வேகமூட்டப்பட்டிருந்த ஈழப் போராட்ட உயிர்ப்பு நிலைகளின் மீது அடிவிழுந்ததைக் கண்டு ஈழமக்கள் அதிர்வுக்குள்ளாயினர்...

ஈழப் போராடடம் அதன் இலக்கை அடைவதை விரும்பாத பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் ஈழப் போராட்டத்தை நிலைகுலையச் செய்துள்ளது......

ஈழப் போராட்டத்துக்கெதிரகக இதுவரை எவருமே எதிர்பாராத சக்தியொன்று தன் பிற்போக்குத் தனத்தை பிரகடனப் படுத்தியுள்ளது.

மிகவும் அபாயகரமான இந்த நிலைமைகளில் நம்மத்தியில் நடமாடும் மக்கள் விரோத சக்திகளை சுதந்திரம், விடுதலை, என்பவற்றின் பகமை வர்க்கங்களின் பிரதிநிதிகளை, ஈழ மக்கள் மீது வலுக்கட்டாயமான நாட்டாமை செலுத்தி வரும் இந்த சண்டித்தனக்காரர்களை மக்கள் மத்தியிலிருந்து அநநியப்படுத்தவும் அத்தோடு ஈழப் போராட்டத்தின் உண்மையான உயிர்ப்பு சக்திகளுக்கு ஊட்டம கொடுப்பதும், ஈழத்தேசத்து ஒவ்வொரு பிரஜையினதும் முன் நிற்கும் அவசர அவசிய பணிகளாகும்.


ஸ்ரீ லங்கா முதலாளித்துவ அரசுக்கெதிராகத் தொடுக்கப்பட்டுள்ள போராட்டத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளவோ அத்தகைய முதலாளித்துவ அரசின் சாரத்தை தெரிந்து கொள்ளவோ முயற்சிக்காமல் 'தமிழீழமே எங்கள் தாகம் என்ற வெறுமையான கோஷத்தை எழுப்புபவர்களால் அண்மைக் காலத்தில் நடாத்தி முடிக்கப்பட்ட போக்கிரித்தனமான படுகொலைச் சம்பவங்கள்!

மனித நாகரீகத்திற்கு முற்றிலும் எதிரானது!

ஈழ மக்களின் அபிலாசைகளுக்கு எதிரானது!

இது ஒரு அப்படடமான மக்கள் விரோத நடவடிக்கை!

ஈழப் போராட்ட இலக்கின் மீது அதைநேசித்த மக்களின் நினைப்புக்கள் மீது வைக்கப்பட்ட வேட்டு! என்பதை அச்சமின்றி எடுத்துரைக்க இதற்கு காரணமானவர்களை கண்டிக்க அனைத்து ஈழ மக்களும் தயாராக வேண்டும்.



உலகப் புரட்சிகளின் வரலாறுகள் அவை கற்றுத தந்த போதுமான அனுபவங்களால் வலிமைமிக்க சக்தியாக ஈழவிடுதலைப் போராட்டத்தில் முனைப்பாக நின்ற தமிழ்ஈழ விடுதலை இயக்கம் உலக விடுதலை அமைப்புக்கள் மீதான சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முரட்டுத் தனமான தாக்குதல்கள் மத்தியிலும் தனது முற்போக்கான தன்மைகளை விட்டுக் கொடுத்திடாமல் ஈழவிடுதலையின் இலக்கை நோக்கிப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், ஈழ விடுதலையின் இலக்கில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டு விட்ட விடுதலைப் புலிகளின் வெறுக்கத்தக்க நடவடிக்கைகள் ஈழப் போரரட்டத்திற்கெதிராக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன.

புரட்சிகரப் போராளிகளின் புனிதத்தன்மையை இழிவுபடுத்தி உலகத்தின் விடுதலையைய நாடும் சக்திகளுக்கு துரோகம் இழைத்து விடடார்கள் விடுதலைப் புலிகள்.

தமது கைகளிலே தாவப்பட்ட ஆயுதங்களைப் பயன் படுத்தி ஸ்ரீலங்கா ஆட்சியதிகாரத்தைப் பலவீனப் படுத்துவதற்குப் பதிலாக, கேவலம், வெறுமனமே உணர்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த அகம்பாவப் போக்குகளுக்கு பலியாகி விடுதலையை நாடும் அனைத்து வர்க்கங்களுக்கும் பயங்கரக் குற்றமிழைத்து விட்டார்கள்





இத்தகைய தீய சக்திகளை எதிர்த்து தீர்மானமான போராட்டம் நடத்த வேண்டிய பொறுப்பு ஈழ விடுதலையை நேசிக்கும் சக்திகளுக்கு மேலதிக சுமையாக்கப் பட்டுள்ளது.

ஈழப் போராட்டத்திலிடுபட்டுள்ள ஏனைய அமைப்புக்களை அழித்தொழிப்பதில் தனது முழுமையான சக்தியையும் செலவிட்டு வரும் விடுதலைப் புலிகளின் அகம்பாவப் போக்கில் சர்வதேச பிற்போக்குச் சக்திகளின் நிழல்கள் காணப்படுவதை இவர்களின் நடவடிக்கைகளை ஆழ்மாக நோக்கும் ஒவ்வொருவராலும் புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

விடுதலைப் புலிகளினால் தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் சிறீசபாரத்தினமும், அவர் தம் போராளிகளும் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் அவர்களின் கடைந்தெடுத்த பிற்போக்குத் தனத்தை வெளிச்சப் படுத்தியுள்ளது.

> யாழ், பூபாலசிங்கம் புத்தகக் கடையில் இருந்த சுமார் 2,000 துக்ளக் புத்தகங்களை LTTEயினர் தீயிட்டு கொளுத்தினர். துக்ளக்கில் LTTEயினரின் போலிப் பிரச்சாரங்களுக்குதக்க பதிலடி கொடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இக்கொடூரத்தை நிகழ்த்திய இவர்களைக் கண்டு ஈழமக்கள் அஞ்சி ஒதுங்குகின்றனர். இவர்களைப்பற்றி எவ்விதமான விமர்சனங்களும் செய்யமுடியாதவாறு வாய்மூடி மௌனிகளாக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் பல கொடூர நிகழ்வுகளை நடாத்த இவர்களை அனுமதிக்க விரும்பாத எவரும் இவர்களுக்குப் பின்னால் நிற்பதற்கு நியாயமில்லை என்பதே எமது முடிவு.

இந்த முரட்டு சக்திகளை அடையாளம் கண்டு கொள்வதற்கு நேற்று நடந்தவை போல் இன்னும் பல கசப்பான சம்பவங்கள் நடந்துதான் தீர வேண்டும் என்றால் அது எமது சமூக வளர்ச்சியின் மந்தமான போக்கையே மெய்ப்பிக்கின்றது.

ஆனால், அந்த அளவிற்கு ஈழ மக்கள் நீண்ட நெடிய உறக்கத்தில் இருந்து விடப் போவதில்லை என்பதை விடுதலைப்புலிகளின் அராஜகவாதத்துக்கெதிரான ஈழ மக்களின் நாளைய எழுச்சிகள் நிரூபிக்கப் போகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# முப்படைகளின் முற்றுகைகள்.... தொடரும் இனப்படு கொலைகள்.

எமது நிகழ்காலம் கொடூரமான இராணுவ அடக்கு முறைகளின் உச்சங்களேயும், அவற்றிற்கெதிராகப் பல்வேறு வடிவங்களில் வெடித்தெழும் போராட்டங்களேயும் வரலாறுக்குகிறது.

இராணுவ எதேச்சாதிகார அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்கள்...

தென்னுப்பிரிக்காவில் நிறவெறி அரசுக்கெதிராகவும்...

பாகிஸ்தானில் ஷியாவுல் - ஹக் அரசுக்கெதிராகவும்...

பங்களாதேஷில் எர்ஷாத் அரசுக்கெதிராகவும்...

இலங்கையில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமாகவும் வடிவம் பெற்றுள்ளன.

மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள் - மனிதனுக்குரிய கௌரவம் - வாழ்க்கைக்கான உத்தரவாதம் - இவற்றை வெறும் வார்த்தைகளாலும், வெற்று ஒப்பந்தங்களாலும் உத்தரவாதம் செய்ய முடியாது - என்ற கசந்து போன அரசியல் வரலாற்றின் தர்க்க ரீதியான வளர்ச்சியில் தான் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் கண்ணி வெடிகளாகவும் - துப்பாக்கி ரவைகளாகவும ஆழம் பெற்றன

அநீதி, துயரம், அறிவும், நியாயமும், கூடச் சுமந்து கொள்ள முடியாத அளவுக்கு படுகொலைகள்......

தங்களது சொந்த மண்ணில் இருந்து வேர்கள் பிடுங்கியெறியப்பட்டு அகதிகளாக வெறியேறும் மக்கள்...

எல்லைப் புறங்களில் எரிந்து கொண்டிருக்கும் எமது வீடுகள்...

வயல்களில் இன்னும் அடங்காத புகை...

இவையே தமிழ் ஈழ மண்ணின் யதார்த்தம்.

பேச்சுவார்த்தைகள் - போர் நிறுத்தங்கள் - மாநாடுகள் யுகத்திலும் எமது மண்ணின் யதார்த்தம் மாறியது கிடையாது.

இவைகள் தீர்வுகளற்ற மாறிலிகள்; ஒடுக்கு முறைப் பொறிகள்.

சிறிலங்கா அரசின் புதிய பிரேரணைகளும் - ஆய்வுகளும் - யோசனைகளும்,..

எமது தாயகத்தை மாகாணசபை என்ற போர்வையில் துண்டாடும் சதியையும்...

எமது மண்ணை மத்திய அரதில் உடமை என பிரகடனப் படுத்தி அவற்றில் சிங்கள மக்களை குடியமர்த்துவதற்குரிய அதிகாரத்தையும்....

ஆயுதப் படை என்பது மத்திய அரசின் எண்ணங்களுக்கு பிரதிபலிப்புக் கொடுக்கும் - கைப்பொம்மையாக உருவாக்கப் படுவதும்...

ஏகாதிபத்திய முட்கள் எம்மை ரணங்களாக்க முனைவதை தெளிவுபடுத்துகின்றன.

திம்பு பேச்சுவார்த்தையின் போது நாம் முன்வைத்த 4 அடிப்படைப் பிரேரணைகளையும் திருப்தி செய்யக்கூடிய அரசியல் திட்டத்தை சிறீலங்கா அரசாங்கம் முன்வைக்காத - வரை நாம் சிறீலங்கா அரசுடன் எந்த் விதமான பேச்சுவார்த்தையும் நடாத்த தயாரில்லை ஜெயவர்த்தன அரசாங்கத்தின் தற்போதைய பிரேரணைகள் ENLF அமைப்பால் முழுமையாக நிராகரிக்கப் பட்டன. ஏனைய அமைப்புகளும் இக்கருத்தையே கொண்டிருந்தன.

எமது மக்கள் ஆயிரக் கணக்கானோர் சுட்டு வீழ்த்தப்படுவதையும்... நூற்றுக் கணக்கானோர் உயிரோடு எரிக்கப்படுவதையும்... சிறீலங்காவின் சிறைக் கூடங்களில் ஆயிரக் கணக்கானோர் பயணக் கைதிகளாக்கப்பட்டு ''மொஸாத்'' பாணி சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதையும் கண்டு அஞ்சாது வெஞ்சமர் புரிகின்றோர் களிணில் நிச்சயமற்ற அற்ப சொற்ப அரைகுறை சலுகைகளை பெறுவதற்காக அல்ல.

ஆனல் தற்போது இந்திய அரசின் முயற்சியால் தமிழர் விடுதலை கூட்டணிக்கும் சிறீலங்கா அரசுக்கும் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றதென்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இப்பேச்சுவார்த்தையை குலேக்கும் விதத்திலோ, தடுக்கும் விதத்திலோ செயலாற்ற வேண்டாம் என நாம் கேட்கப்பட்டிருக்கிறோம்.

எமது மக்கள் அனுதைகளாக்கப்பட்டு, வீதிகளில் பிணங்களாக்கப்பட்ட போதெல்லாம் தட்டிக்கேட்டு எம்மை அரவணைத்து, ஆதரவளித்து வரும் இந்திய அரசின் வேண்டுகோளை நாம் புறக்கணிக்க முடியாது.

எனவே, இந்திய அரசின் வேண்டுகோளை ஏற்று தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நாம் இடையூருக நிற்கமாட்டோம் என்பதை தெரிவித்தோம்

ஆனல், இப்பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே எமது மக்கள் கொல்லப்படுவதும் துன்புறுத்தப் படுவதும்... கைது செய்யப்படுவதும்... வழமைபோல் நடைபெற்று கின்றன.

ஜூலை மாதத்தில் மட்டும் திருமலையில் 101 தமிழர்களும் - மட்டுநகரில 54 தமிழர்களும் - மன்னரில் - 52 தமிழர்களும் - வவனியாவில் 32 தமிழர்களும் - யாழ்ப்பாணத்தில் 20 தமிழர்களும் - முல்லைத்தீவில் 13 தமிழர்களும்- அம்பாறையில் 08 தமிழர்களும்- கிளிநொச்சியில் 7 தமிழர்களும் மிருகவெறிபிடித்த சிறிலங்கா ஆயுதப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

இவை தவிர, திருமலையில் 43 தமிழர்களும் - மட்டுநகரில் 14 தமிழர்களும் - மன்னரில் 12 தமிழர்களும் - வவுனியாவில் 04 தமிழர்களும்- கிளிநொச்சியில் 06 தமிழர்களும்- முல்லைத்தீவில் 5 தமிழர்களும்- அம்பாறையில் 4 தமிழர்களும் - யாழ்ப்பாணத்தில் 3 தமிழர்களும் காணமல் போயுள்ளார்கள்.

ஆதலால், இத்தகைய அநீதிகளை கண்டித்து, இவை தொடராமல் இருக்க இந்திய அரசு ஆவன செய்யவேண்டும் என வேண்டினேம்.


இந்திய அரசும் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தடுக்கவும், பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடாத்தவும் ஒரு மாத காலத்திற்கு தாக்குதல்களை இடைநிறுத்தும்படி - எம்மை கேட்டுக் கொண்டது.

சிறீலங்கா இராணுவம் தங்களது முகாமில் இருந்து வெளியே வராமல் இருந்தால், நாமும் ஒரு மாத காலத்திற்கு தாக்குதல்களை இடை நிறுத்துவோம் என்பதை இந்திய அரசிடம் தெரிவித்தோம்,

ஆனல்,

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பதை முழுமையாக சிறீலங்கா அரசு நிராகரித்து விட்டது.

வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற விடயத்தில் நாம் விட்டுக் கொடுக்க மாட்டோம் என அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி சென்னையில் மார்தட்டிவிட்டு சென்றது.



சிறீலங்கா சுதந்திரக் கட்சி, புத்த பிக்குகளது அமைப்புகள் உட்பட 20 சிங்கள அமைப்புகள் ஜெயவர்த்தனவின் பிரேரணைகளுக்கு பலமான எதிர்ப்பை காட்டி வருகின்றன.

இந்த நிலைமைகளில்

ஜெயவர்த்தன அரசுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் உடன்பாடு ஏற்படுமா?

ஏனெனில், புத்த பிக்குகளும் ஏனைய சிங்கள அமைப்புகளும் கடுமையாக எதிர்கின்றன என்ற காரணத்தை காட்டியே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் சிறிலங்கா அரசு சமர்பித்த பிரேரணைகளை ஒரு வருட காலமாக இழுத்தடித்துவிட்டு இறுதியில் தூக்கி எறிந்தவர் ஜெயவர்த்தன.

ஆனல் உடன்பாடு காணப்படுவதற்கு முன்பு, போராளிகளுடன் ஆலோசனை கலக்கப்படும், போராளிகளின் பரிசிலனைக்கு வைக்கப்படும் என இந்திய அரசு உறுதியளித்திருக்கிறது.

ஆனல்,

தமிழ் ஈழத்தை இலட்சியமாக கொண்ட நாம், சுதந்திரத்திற்காகவும் - சமாதானத்திற்காகவும் போர்க் கொடியை உயர்த்திப் பிடிக்கும் தமிழ ஈழ மக்களது விருப்பங்களை அபிலாசைகளை - பூர்த்தி செய்யாத தீர்வுகளை முழுமையாக நிராகரிப்போம்.

படிப்பகம்